ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

SRI VAISHNAVAN.

உண்மை யறிவை உணர்த்தும்.

ஒருமாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

தொகுதி 5. 1106-௵ பகுதி 11

பிரமோதூத ௵ புரட்டாசி ௴

கடவுள் வணக்கம்

பட்டுடுக்கு மயர்த்திரங்கும் பாவை பேணாள்
பனி நெடுங்கண்ணீர் ததும்பப் பள்ளிகொள்ளாள்
எட்டுணைப் போதென் குடங்காலிருக்க கில்லாள்
எம்பெருமான் திருவரங்க மெங்கே யென்னும்
மட்டுவிக்கி மணிவண்டு முரலுங் கூந்தல்
மடமானையிது செய்தார் தம்மை மெய்யே
கட்டுவிச்சி சொல்லென்னச் சொன்னாள் நங்காய்
கடல் வண்ணரிது செய்தார் காப்பாராரே.

N. B. நம் ஸ்ரீவைஷ்ணவன் ஆபீஸில் வேலைபார்த்துவந்த கோவிந்தக்கோன் சந்தாவசூலை எம்மிடம் சரியாய் ஒப்புவிக்காமல் பலமோசடிகள் செய்திருப்பதால் மேற்படியாரை 1-4-30 முதல் வேலையைவிட்டு நீக்கியிருக்கிறது. நேயர்கள் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ

* ஸ்ரீ வைஷ்ணவன். *

ஐந்தாம் ஆண்டு நிறைவு.

நம் ஸ்ரீவைஷ்ணவனுக்கு இம்மாதத்தோடு ஐந்தாம் ஆண்டு நிறைவுறுகின்றது எம்பெருமானது அனுக்கிரகத்தாலும், பெரியோர்களது ஆசீர்வாதத்தாலும், விஷயதானம் புரியும் பண்டிதர்கள், சந்தாநேயர்கள் இவர்களது உதவியாலும், பொதுமக்களின் அபிமானத்தாலும் இவ்வைஷ்ணவன் எவ்வித இடையூறுமின்றித் தனது ஐந்தாம் பிராயத்தைக் கழியாநின்றான். எவ்வளவோ குற்றங்குறைகள் காணப்படினும் அவைகளைப் பொருட்படுத்தாமல்,

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு "

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு "

என்ற திருக்குறளுக்கிணங்க இவ்வைஷ்ணவனை அபிமானித்து ஆதரித்த சந்தா நேயர்கள் எல்லோருக்கும் அடியேனது மனமார்ந்த வணக்கம் உரியதாகுக.

அன்றியும் காளமேகமானது எவ்வித பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாராமல் கடல்நீரைக்கவர்ந்து நன்னீராக்கி உலகெங்கும் சுற்றித்திரிந்து மழையைப்பொழிந்து சகல ஜீவராசிகளையும் உய்விக்கின்றது. அதுபோல பல பண்டித சிரோமணிகள் சாஸ்திரங்களிலுள்ள பாரமார்த்திக உண்மைகளைக்கிரகித்து மக்களுக்குப் புலனாகும்படி தெளியநடையில் எழுதி இவ்வைஷ்ணவனுக்கு உபகரித்த உதவி மிகவும் போற்றற்பாலது. அவ்விஷயதானங்கள் இன்றேல் இவ்வைஷ்ணவன் இந்நாட்டில் தோன்றி நிலவமுடியாதாகையால் அத்தகைய பேருதவியைச் செய்தருளிய பண்டித சிரோமணிகள் அனைவருக்கும் அடியேனது மனமார்ந்த வணக்கம் உரியதாகுக.

மேலும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பழமொழிக்கிணங்க இவ்வைஷ்ணவனுக்கு அன்னையும் பிதாவுமாக இருந்து போஷித்துவரும ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீவானமாமலை இராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளின் அன்பு கனிந்த ஆதரவு அளவிடத்தக்கதன்று.

> அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க
> சம்பந்தங் காட்டித் தடை காட்டி—இம்பர்
> திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டும்
> அவனன்றோ ஆசாரியன்

என்ற திவ்வியகவிக்கிணங்க இவ்விருள் தருமா ஞாலத்தில் ஞானவொளியைப் பரப்பிவரும் சிறந்த குருநாதனாகிய அந்த ஜீயர் ஸ்வாமிகள் தம் கண்ணே போல் போற்றி வரும் பாக்கியத்தை இவ்வைஷ்ணவன் பெற்றிருக்கின்றான். ஆதலால் அத்தகைய ஸ்வாமிகளது தேனே மலரும் திருவடித்தாமரைகளை அடியேன் சாஷ்டாங்கமாய் விழுந்து சேவித்து வணங்குகின்றேன். மேலும் மக்கள் பொய்நின்ற ஞானம் பொல்லாவொழுக்கம், அழுக்குடம்பு இவைகளைப்போக்கி உய்தற்கு ஆசார்ய பக்தி மிகவும் இன்றியமையாதனவாயிருப்பதால் அந்த ஸ்வாமிகளை தெய்வம் போல் போற்றிப்புனையும் அன்பு கனிந்த பக்தி எப்போதும் அழியாது உள்ளத்தில் நிலை பெற்றிருக்கும்படி எம்பெருமான் அருள் புரிவானாக நிற்க,

இவ்வைஷ்ணவன் இவ்வைந்தாம் பிராயத்தில் வெளியிட்டுள்ள விஷயங்களாவன; கடவுள் வணக்கம், ஸ்ரீவைஷ்ணவ தர்மம், ஸ்ரீ ஆண்டாள் பிராட்டியின் அருட்திறன், வத்ஸலா, அரியமொழிகள், மக்களறுதம், ஸ்ரீமத் வானமாமலை இராமநுஜ ஜீயர் ஸ்வாமிகள் திருநக்ஷத்திரக்கொண்டாட்டம், பகவத் காமமைவைபவம், ஆக்ஷேபத்திற்கு சமாதானம், ஓர் சொற்பொழிவு, முதலாழ்வார் மூவர், ஞானப்பொறிகள், நம்மாழ்வார் வரலாறு, முதலியவைகள் சில அசந்தர்ப்பங்களால் நம்மாழ்வார் வரலாறு முன்கூட்டியே கிடைக்காத படியால் அதை இத்தொகுதியின் ஆரம்பத்திலிருந்து பிரசுரம் செய்ய முடியவில்லை.

இனி இவ்வைஷ்ணவன் தனது ஆறுவது பிரயத்தில் முன் னிலும் பல முக்கிய விஷயங்களை வெளியிடக்கருதியுள்ளான். அவையாவன;

குருபரம்பரை ஸ்ரீகங்கள், ஆழ்வார்கள் அருளிச்செயல்கள், அவைகளின் வியாக்கியானக்குறிப்புகள், திருமந்திரார்த்தம், ஸ்ரீ வசன்பூஷணம் முதலிய ரகஸ்யங்களின் குறிப்புகள், பாகவத, இராமாயண முதலிய இதிகாசங்களின் நுணுக்கப்பொருள்கள், வேதம், உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவற்கீதை, முதலிய வட மொழி நூல்களின் நுட்பங்கள், கம்பன் முதலிய மகா கவிகளின் கவித்திறன்கள், மகருஷிகள், ஆழ்வாராசார்யர்கள், சங்கப்புலவர்கள் இவர்களின் கால ஆராய்ச்சி, திருப்பதி, ஸ்ரீரெங்கம் முதலிய திவ் விய தேசத்து எம்பெருமான்களின் கால ஆராய்ச்சி, வேதம், புராணம், உபநிடதம், தமிழ்ச்சங்கநூல்கள், இவைகளின் கால ஆராய்ச்சி, அக்காலத்து அரசர்களின் காலஆராய்ச்சி, அர்த்தபஞ் சக சமபந்தமான வேதாந்த விஷயங்கள், பல முக்கிய நூல்களின் மொழி பெயர்ப்புகள், நாடக அமைப்புகள், கவி அமைப்புகள், பழமொழிகள், வடமொழி தென்மொழிகளின் மபிமைகள், ஆரி யர், தமிழர் இவர்களின் நாகரீகம், பஞ்ச பூதாதிகளின் சக்தி விசேஷம், சூரியன் முதலிய கிரகங்களின் அமைப்பு, ஜோதிடத்தி ன் நுணுக்கம், அஷ்டாங்கயோகம், அஷ்டமாச்சித்தி இவைகளி ன் தத்வம், மந்திரங்களின் தத்வம், முதலிய பலமுக்கிய விஷயங் கள்.

விஷயதானம் புரியும் நேயர்கள் மேற்கண்ட அட்டவணையை க்கவனித்து அவரவர்கட்குகந்த விஷயங்களில் தெய்வநூஷணை மதநூஷணை, மக்கள் நூஷணையில்லாமல் எவருக்குபகலபமாய் விளங் கும்படி தெளியநடையில் எழுதி விஷயதானம் புரியக்கேட்டுக்கொ ள்கிறேன். மேலும் நம் நாட்டில் சமய சம்பந்தமாகவும், ஆலயம் சத்திரம் முதலிய பொது தர்மஸ்தாபனங்கள் சம்பந்தமாகவும் பல திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இதன்றி சமயமுன்னே ற்றத்திற்காகவும் பக்த ஜனங்களின் பாதுகாப்பிற்காகவும் பல முய

ற்சைகள் செய்ய வேண்டியிருக்கிறது. இவைகளுக்காக நாடெங்கும் சுற்றித்திரிந்து வேண்டிய பிரசாரங்கள் செய்யவும், சங்கங்கள் நிறுவவும், அடிக்கடி மகாநாடுகள் கூட்டவும் செய்யப்படுகிற பிரயத்தனங்கட்கு இவ்வைஷ்ணவன் வேண்டிய அளவு ஆதரவளிக்கக் காத்திருக்கின்றான். இது விஷயமாக வெளியிடப்படுகிற பல்வித வெளியீடுகளையும், விளம்பரங்களையும் சுருங்கிய அளவில் பிரசாரம் செய்து மக்களுக்குத் தெரிவிப்பதில் வைஷ்ணவன் முனைந்து நிற்கிறான். ஆதலால் சமயப்பற்றுள்ள அறிஞர்கள் ஆலயம் முதலிய பொது தர்ம ஸ்தாபனங்களைக் கவனித்து ஆங்காங்குள்ள குற்றம் குறைகளையும், அவைகளை யொழிக்கவேண்டிய உபாயங்களையும் அடிக்கடி வைஷ்ணவனுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நிற்க,

மற்றுமோர் விஷயம் நேயர்களின் உயர்வான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இவ்வைந்தாம்பிராயத்தில் வைஷ்ணவனுக்குப் பல ஆபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன. சந்தா வசூலுக்காக நியமிக்கப்பெற்ற கம ஆபீஸ் சேவுகர் கோவிந்தக்கோன் வசூலான சந்தாப்பணங்களைச் சரியாய் எம்மிடம் ஒப்புக்கொடுக்காமல் பல மோசடிகள் செய்திருக்கிறார். இதன் மூலம் சுமார் இருநூறு ரூபாய்வரை கடந்த 4-வது தொகுதிக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதன்றி இவ்வருஷத்திய சந்தா வசூலுக்காக வெளிஜில்லாக்களிலிருக்கும் நேயர்கட்கு வி-பி அனுப்பியதில் சில நேயர்கள் தங்கள் பொறுப்பையுணராமல் வி-பி யை வாபஸ் செய்திருக்கிறார்கள். இவ்வகையில் எமக்கு நூறு ரூபாய் வரை இத்தொகுதிக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சொற்ப சந்தாவில் நடத்தி வரும் இவ்வைஷ்ணவனுக்கு இத்தகைய நஷ்டம் ஏற்பட்டால் இவ்வைஷ்ணவன் எவ்வளவு கஷ்டத்தை யனுபவித்திருப்பானென்பதை நேயர்களே அறிந்து கொள்ளக்கூடும். வி-பியை பெற்றுக்கொள்ளாமல் நஷ்டப்படுத்திய நேயர்களைப்பற்றி எதுவும் கூற எம்மனம் ஒருப்படவில்லை ஆயினும் ஒன்றுமட்டும் கூற விரும்புகின்றேன். இத்தகைய தர்ம காரியங்களில் உபகாரம் செய்ய மனமில்லாவிட்டாலும் அபகாரமாவது செய்யாதிருக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வைஷ்ணவனைத்தவிர இந்த ஜில்லாவில் வைஷ்ணவ சம்பந்தமான பத்திரிகை வேறுகிடையாது சுமார் பத்து வருஷங்களுக்கு முன் மூன்று ரூபாய் வருஷ சந்தாவோடு "இராமாநுஜன்" என்ற ஓர் மாதாந்தரத்தமிழ்ப்பத்திரிகை ஒன்று இத்திருநெல்வேலியில் தோன்றி ஒரு வருஷத்திற்குள் நின்றுபோய்விட்டது. இதன்றி இந்நகரிலேயே பிறசமயப்பத்திரிகைகள பலதோன்றி நின்றுவிட்டது. பிற ஜில்லாக்களைக்கவனிக்கும்போதும் வைஷ்ணவபத்திரிகைகள் ஒன்றிரண்டே நிலவுகின்றன. இதனால் மத சம்பந்தமான பத்திரிகைகளை நடத்துவதில் எவ்வளவு கஷ்டமிருக்கிறதென்பது நேயர்கட்குப்புலனாகாமற்போகாது. இந்நிலையில்இவ்வைஷ்ணவன் ஒரு ரூபாய சந்தாவோடு இந்நாட்டில் தோன்றி ஐந்துவருஷகாலமாய் நிலவிவருகின்றான். எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையில் ஊக்கத்தைக்கைவிடாமல் இவ்வைஷ்ணவனை அடியேன் பிரசுரம் செய்து வருகிறேன். அடுத்த 6-வது தொகுதி முதல் இவ்வைஷ்ணவனை 32-பக்கங்களாகப்பெருக்கிப்பிரசுரம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். அதற்குப் பொது மக்களின் ஆதரவு மிகவும்வேண்டற்பாலது. இவ்விஷயமாய் டைட்டில் 3-வதுபக்கத்தில்கண்டிருக்கிற அறிவிப்பை படித்துப்பார்த்து வைஷ்ணவனுக்கு வேண்டும் உதவிகள் புரியும்படி பொது மக்கள் எல்லோரையும் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்கிறேன். இந்நாட்டிலிருக்கும் அறிஞர்கள், அதிகாரிகள், நியாயவாதிகள், தனவந்தர்கள், வியாபாரிகள், மிராசுதார்கள் முதலிய எல்லோரும் வைஷ்ணவனை அபிமானித்து ஆதரிக்கக்கேட்டுக்கொள்கிறேன். எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் புரிவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!! ப-ர்

N. B. இவ்வைஷ்ணவன பிரசாரத்திற்காக பத்திராதிபர் வெளியூர்களுக்குச்செல்ல வேண்டியிருத்தலால் அடுத்த 6-வதுதொகுதி சிறிது தாமதப்பட்டு வெளியாகுமென்பதை நேயர்கட்குத்தெரியச்செய்திருக்கிறேன் டைட்டில் 4-ம் பக்கம்பார்க்க. ப-ர்

(முன் 60—ம் பக்கத்தொடர்ச்சி)

"வந்தருளி யென்னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்தே! உலகுக்கோர் முந்தைத்தாய் தந்தையே! முழுவேழுலகு முண்டாய், செந்தொழிலவர் வேதவேள்வியறாச் சிரீவரமங்கலநகர் அந்தமில் புகழாய் அடியேனையகற்றேலே"

என்ற நம்மாழ்வார் பாசுரத்தைத் திருவழுதநூர் அரையர் பண்ணுடன் இசைத்தருளுகையில "வந்தருளி" யென்னும் பதங்களை அனுஸந்திக்கும் போது அதிலடங்கிய அர்த்தவிசேஷத்திலீடுபட்டு மெய்மறந்து மேலே ஒன்றும் சொல்லமுடியாமல் நெஞ்சும் அடைபட்டவராயிருந்தார்.

இப்பதப்பொருள் சுயமாவது:—எம்பெருமானே! உன்னருளினாலேயே நீ என்பால் வருவதாக வாக்களித்திருக்கிறாய்." இது சிறுமையும் தாழ்மையுங் கொண்ட கேவலம் மனிதனையடைந்து அவனது எளிய நெஞ்சத்தைத் தன்னிருப்பிடமாயுங் கருதுவதில் சர்வேசுரன் காட்டும் அன்பையும், அநுதாபத்தையும், தியாகத்தையும் குறிக்கின்றது.

(பகவத் விஷயம் "வந்தருளி" V 7. 7.)

அமுதனென்னும் எம்பெருமான் திருநாமத்தின் கருத்தென்ன?

(கும்பகோணம்) திருக்குடந்தை யென்னும் திவ்யதேசத்தை நம்மாழ்வார் மங்களாசாஸனம் பண்ணுகையில் அங்கெழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, நோக்கி "ஆராவமுதே" என்றழைத்தார் ஏனெனின் எம்பெருமான் மட்டுமே இத்தகைய அந்தமிலமிர்தமாயிருக்கிறார். இதனோடு ஒப்பு நோக்கின் பாற்கடலைக்கடைந்தெடுத்த அமுதமும் உப்பு நீரே. இந்த உப்பு ஜலத்தையடைதற்கோ நிபந்தனைகள் உண்டு:— உயர்வான தேவஜாதி பிறப்பு, கடுமையான நியமாநுஷ்டானங்கள் முதலியன. அப்படியடைந்தும் அதில் கொஞ்சந்தானெடுத்துக்கொள்ளலாகும். குறையாத அமுதமான எம்பெருமானை அவ்விதமில்லை. இவ்வமுதங்கொள்ள எந்த உயிருக்கும் அருகதையுண்டு. இந்த அமிழ்தை எக்காலும் அநுபவிக்கலாம் மனிதனது ஆத்யாத்மவாழ்க்கையில் ஈச்வரன்

அறிவித்துள்ள நமது உள்ளக்கிடக்கையான சாஸ்திரானுஷ்டானத்தில் செய்யத்தவறியதாலான பாவராசிக்கெல்லாம் மருந்தும் கழுவாயுமாயிருப்பது இஃதொன்று மட்டுமே.

வட இந்தியாவில் லோகசாரங்கமாமுனியென்ற பக்தரொருவர் இருந்துவந்தார். தென்னாட்டிலிருந்து ஒருவர் அங்கேபிரயாணம் செய்தார்.

மாமுனி கேட்டார்.— “பிள்ளாய், அவ்விடத்தில் என்ன விசேஷம்?”

யாத்திரிகர்:— “ஸ்வாமீ! அங்கே பக்த சிரோமணியான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி என்றதோர் ஸூக்த முண்டு புண்ணியாத்மாக்களெல்லோரும் அதைப்பெரிதும் போற்றி வணங்கிவருகிறார்கள்.”

மாமுனி:— “அப்படியானால், உமக்குத்தெரியுமாயின், அதிலிருந்து ஒருபாசுரத்தை யனுசந்திப்பீராக.”

யாத்திரிகர்:— “ஸ்வாமீ! எனக்கு ‘ஆராவமுதே’ என்ற பதமாத்திரம் தெரியும்.”

மாமுனி:— “என்ன! நாராயணன்போன்ற சநாதநமான மற்றத்திருப்பெயர்கள் எத்தனையோ விருக்க ஈச்வரத்தன்மைக்கு இப்படி இன்சுவையான புனைமொழியொன்றை அவர்கள் அங்கே வழங்கி வருகிறார்களா?”

அவர் அவ்வாறு வியந்துகொண்டு அந்த இனியமொழியை யுண்டுபண்ணியோதிவரும் அந்தப்புண்ணிய க்ஷேத்திரத்துக்கு அப்பொழுதே புறப்பட்டார். இத்தன்மையதான மதுரத்திருநாமமொன்றும் வழங்கிவாராத தம்முடைய நாட்டில் தாமதிக்கவும் அவருக்குப் பொறுமையில்லை.

[பகவத்விஷயம்; ‘ ஆராவமுதே ’’ V. 8-1.]

வாணிதாஸன்.